# தேவகோட்டை நகராட்சி.
## சிறப்புக்கூட்டம்.

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற சிறப்புக்கூட்டம் 09.11.2023–ம் தேதிவியாழக்கிழமை காலை 12.00 மணிக்கு சிறப்புக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகர்மன்றம்.

**பொருள் – 418**

27.10.1936ம் தேதிய உள்ளாட்சி நிறுவன அரசினை (லோக்கல் செல்ஃப் கவர்மெண்ட்) எஸ்.4698–ன்படி, 01.04.1937 முதல் தேவகோட்டை நகராட்சி நிறுவப்பட்டுள்ளது. இந்நகராட்சி உதையாச்சி, இரவுசேரி, பணிப்புலான்வயல், கண்ணங்கோட்டை ஒரு பகுதி மற்றும் தாழையூர் ஆகிய வருவாய் கிராமங்களை உள்ளடக்கியதாகும். இந்நகராட்சியில் மொத்த பரப்பளவு 12.42 சதுர கிலோமீட்டர் ஆகும். 28.10.1978ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.1677–ன்படி தேவகோட்டை நகராட்சி 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணை எண். (ந.நி–5) நிலை எண்.85, நாள்– 22.05.1998–ன்படி முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது. 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கீட்டின்படி இந்நகராட்சி மக்கள் தொகை 51892 ஆகும். இந்நகர் பகுதிக்குள் திருச்சி– இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ள படியாலும், சுமார் 10 கிலோமீட்டர் தொலைவில் தேவகோட்டை ரஸ்தா சாலையில் ரயில் நிறுத்தம் அமைந்துள்ளதாலும் தினசரிநகருக்குள் வந்து செல்லும் பொதுமக்களின் எண்ணிக்கை சுமார் 10000 ஆகும். இந்நகர் பகுதிக்குள் தினசரி சுமார் 17. 85 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரமாகி அவை அனைத்தும் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்படுகிறது.

அரசாணையின்படி தேவகோட்டை நகராட்சி வார்டுகள் மறுவரையறை செய்து 27 வார்டுகளுக்கான தேர்தல் நடைபெற்றுள்ளது. அதன்படி நகர்மன்ற பெண் உறுப்பினர்கள் 15 நபர்களும் ஆண் நகர்மன்ற உறுப்பினர்கள் 12 நபர்கள் உள்ளனர்.

தேவகோட்டை நகராட்சி பகுதியில் செட்டிநாட்டு கலை அம்சத்துடன் கூடிய பாரம்பரியமான பெருமளவிலான நகரத்தார் வீடுகள் அமைந்துள்ள பகுதியாகும். மேலும் மசூதிகள், தேவலாயங்கள், கோவில்கள் பெருமளவில் அமைத்துள்ளது. நகர் பகுதியில் சுமார் 16 தனியார் பள்ளிகள் 7 நகராட்சி பள்ளிகள் மற்றும் நான்கு தனியார் கல்லூரிகள் அமையப்பட்டுள்ளது.

தேவகோட்டை நகராட்சியில் கீழ்கண்டுள்ள விபரப்படி வரி மற்றும் வரியற்ற இனங்களில் சொந்த வருவாய் ஆண்டுத்தோறும் உயர்வடைந்து வருகிறது.

| நிதியாண்டு | வருவாய் |
|---|---|
| 2021–2022 | ரூ.788.45 |
| 2022–2023 | ரூ.1016.96 |
| 2023–2024 | ரூ.1020.67 |

மேலும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட துாய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் மொத்த எண்ணிக்கை 171–லிருந்து திருத்திய அரசாணையின்படி மொத்தம் 43 பணியாளர்கள் மட்டுமே முதல் நிலை நகராட்சிக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி பணியாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளபடியால் எதிர்வரும் ஆண்டுகளில் பணியாளர் ஊதிய செலவினங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டு அவை நகரின் வளர்ச்சிக்காக செலவிட வாய்ப்புகள் உள்ளது. இந்நகராட்சி வரிவிதிப்பு விகிதாச்சாரம் ஒரு நபருக்கு சராசரி வரி ரூ.1286 /– எனவும் வரிவிதிக்கப்பட்ட மொத்த கட்டிட எண்ணிக்கை 24346 எனவும் கட்டிடம் ஒன்றுக்கு சராசரி வரிவிதிப்பு தொகை ரூ.1248 /– எனவும் உள்ளது.

எனவே இந்நகராட்சியின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டும். நகர்ப்புற உள்ளாட்சிகளின் சேவையினை மேம்படுத்தவும், அரசாணையின்படி தேர்வு நிலை நகராட்சிக்கான நிர்ணயிக்கப்பட்ட வரி வருவாய்க்குள் உள்ளபடியால் தேவகோட்டை முதல்நிலை நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.1939/2023/அ1</u>

**தீர்மானம் 418 – அனுமதிக்கப்பட்டது.**

––

(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்
நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகராட்சி.

/உண்மை நகல் /

மேலாளர்,
தேவகோட்டை நகராட்சி